[1979 ஏப்ரல் 27

மதுரை ஜில்லாவையும் இணைக்கிற பழனிக்குச்செல்லும் 22-வது மைலில்இருக்கிறது. அந்த இடத்தில் ஜனநெரிசல் இருக்கும்போது பிரயாணிகளுக்கு வேண்டிய சவுகரியம் செய்துகொடுக்க, இந்தப் பேரூராட்சிக்குப் போதிய நிதி வசதி இல்லையென்றால், அரசாங்கமே முன்வந்து இதைச் செய்யக்கூடாதா என்பதை நான் அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, இந்தப் பேரூராட்சிக்கு மட்டுமல்ல. தமிழகத்திலுள்ள பல பேரூராட்சிகளில் உள்ள பேருந்து நிலையங்களில், அதோடு பல நகராட்சிகளில் இந்தப் பிரச்னை இருக்கிறது. பல இடங்களில் போதிய சுகாதாரவசதி இல்லாத நிலைமை இருக்கிறது. இதற்குக் காரணம் நிதி நிலைமைத் தட்டுப்பாடு தான். இதைப் போக்குவதற்கு மாவட்ட போக்குவரத்துக் கழகங்களிலே இருந்து வரக்கூடிய லாபத்தில் ஒரு பகுதியை ஆரம்பகட்டமாக எடுக்கும் வகையிலே, 25 இலட்சம் ரூபாயில், ஏற்கெனவே இருக்கின்ற பேருந்து நிலையங்களில் சுகாதார வசதி, ஓய்வு இடங்கள், கழிப்பிடங்கள் ஆகியவற்றை கட்ட இருக்கின்றது. முதலில் கிரேடு 1 முனிசிபாலிடிகளிலும், பின்னால் முனிசிபாலிடிகளிலும் இப்படி படிப்படியாக பேரூராட்சிகளிலும் செய்ய வேண்டுமென்று அரசு ஒரு முடிவெடுத்திருக்கிறது.

மருதை ஆற்றின் குறுக்கே பாலம்.

* வினா எண் 859— திரு. என். பெருமாள் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

திருச்சி மாவட்டம் வரகூர் தொகுதி, ஆலத்தூர்-அரியலூர் சாலையின் இடையில் உள்ள மருதை ஆறு என்ற காட்டாற்றின் குறுக்கே பாலம் கட்டும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இல்லை.

திரு. என். பெருமாள் : பேரவைத் தலைவர் அவர்களே, எனது வரகூர் தொகுதியில் சில பஸ்கள் போய்க் கொண்டிருக்கின்றன. அங்கே மருதையாறு இருக்கிறது. அந்த ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டவேண்டும் என்று தொகுதி மக்கள் மகஜர் கொடுத்து, எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அதை மாநில அரசு கவனித்து, அங்கே பாலம் கட்டப்படுமா என்று அறிய விரும்புகிறேன் ?

1979 ஏப்ரல் 27]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, மருதை ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் குறிப்பு ஏற்கனவே இருக்கிறது. அங்கே ஒரு தாம்போதி இருப்பதால், ஒரு மேம் பாலம் உயர்மட்டப் பாலமாகக் கட்டினால்தான் அவர்கள் எண்ணம் நிறைவேறும். அதற்கு 47 லட்சம் செலவாகும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. வரும் ஆண்டில் நிதிநிலைமையை அனுசரித்து, அரசு பரிசீலனையை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். பெருமாள்: பேரவைத் தலைவர் அவர்களே, அந்த முயற்சி மீண்டும் எப்போது எடுத்துக்கொள்ளப்படும்? ஜனங்களுக்கு வசதி எப்போது ஏற்படும்? எனவே, அதைக் கட்டித் தர வேண்டும் என்று அமைச்சர் அவர்களை தாழ்மையாகக் கேட்டுக்கொள்கிறேன்.

(பதில் இல்லை).

சித்தமல்லி ஏரித் திட்டம்.

*வினா எண். 860— திரு. வெ. கருணாமூர்த்தி: மாண்புமிகு வேளாண்மை-பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருச்சி மாவட்டம், உடையார்பாளையம் வட்டம் சித்தமல்லி கிராமத்தில் பாசன வசதிக்காக 'சித்தமல்லி ஏரித் திட்டம்' அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அத்திட்டத்தின் தற்போதைய நிலை என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (ஆ) இத்திட்டம் பற்றி, தலைமைப் பொறியாளர் அரசுக்கு அறிக்கை அனுப்பியுள்ளார். இவ் வறிக்கை அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. வெ. கருணாமூர்த்தி: தலைவர் அவர்களே, எவ்வளவு ரூபாய் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது? எவ்வளவு ஏக்கர் நிலங் கள் அதனால் பயனடையும் என்பதைத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, 2 கோடியே 31 இலட்சம் ரூபாய்க்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அதனால், 4,202 ஏக்கர் புஞ்சை நிலங்களும், 829 ஏக்கர் நஞ்சை நிலங்களும் பாசன வசதி பெறும்.